மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்
முன்னிலை:திரு.ஆர்.மணிவர்மன், பி.ஏ., பி.எல்., எல்.எல்.எம்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, மேட்டூர்
2024 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 23 ஆம் நாள் புதன்கிழமை
இ.ம.எண்.12/2024
அ.வ.எண்.395/2012

பழனியப்பன் ... மனுதாரர்/வாதி

/எதிராக/

1.வையாபுரி
2.பெரமகவுண்டர்
3. மைலி (எ) மயில்
4. அம்மாசி (இறந்தவர்)
5. சின்னபொண்ணு
6. துரைசாமி (இறந்தவர்)
7. சின்னதம்பி
8. மகாலிங்கம்
9. பிரேமலதா
10. ஜெகதீசன் ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு கடந்த 16.10.2024 ஆம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதியான விசாரணைக்கு வரப்பட்டு மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.B.பாலமுருகன் அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 3 வரையிலான எதிர்மனுதாரர்கள் தரப்பில் திரு.R.குருசாமி, வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், 4, 6 எதிர்மனுதாரர்கள் இறந்தவர்களாகவும், 5, 9, 10 எதிர்மனுதாரர்கள் தோன்றாதரப்பினர்களாகவும், 7, 8ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் திரு.S.ஈஸ்வரன் வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை எமது ஆய்வில் இருந்து வந்து மேற்படி இம்மனுவில் இந்நீதிமன்றம் வழங்கிடும்.

## உத்தரவு

உரிமையியல் நடைமுறைச்சட்டம் பிரிவு 151ன் கீழ் விவாதத்திற்காக போடப்பட்டுள்ள வழக்கை மீண்டும் திறக்க உத்தரவிடக்கோரி மனுதாரர் மனுதாக்கல் செய்துள்ளார்.

1) மனுப்பிரமாணப் பத்திரிக்கையின் சுருக்கம் : –

மனுதாரர்/வாதியால் விளம்புகை, விளைவுறு நிரந்தர உறுத்துக்கட்டளை மற்றும் பாகப்பிரிவினை, சுவாதீனப்பரிகாரங்கள் கோரி எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, வழக்கு புதிதாக எழுவினாக்கள் வனைந்த பிறகு விவாதத்திற்காக வாய்தா போடப்பட்டுள்ள நிலையில் தற்போது திருத்தப்பாடு மனு தாக்கல் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதால் இவ்வழக்கை மீண்டும் திறக்க செய்ய வேண்டிய நிலை மனுதாரருக்கு ஏற்பட்டுள்ளது. இது வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல. இம்மனுவை ஏற்காவிடில் பெருத்த கஷ்ட நஷ்டங்கள் ஏற்பட்டுவிடும். ஒரு முழுமையான முடிவை எட்ட முடியாத நிலை ஏற்பட்டுவிடும். அது பல்வேறு புதிய வழக்குகளை தொடர வேண்டிய நிலையை உருவாக்கிவிடும். இம்மனுவை ஏற்பதால் எதிர்தரப்பினருக்கு எந்த இழப்பும் ஏற்படப்போவதில்லை. எனவே விவாதத்திற்காக போடப்பட்டுள்ள வழக்கை மீண்டும் திறக்க உத்தரவிடக்கோரி மனுதாரர் மனுதாக்கல் செய்துள்ளார்.

2) 1ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு, 2, 3 எதிர்மனுதாரர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம்:

(இந்த எதிருரை இம்மனுவின் 7, 8 எதிர்மனுதாரர்களால் தங்களது எதிருரையாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது)

(i) இம்மனு பொய்யானது. சட்டப்படியும், நியாயப்படியும் நிலைக்கத்தக்கதல்ல. வழக்கை திறக்க கோரும் மனுவிற்கு எவ்வித காரணமும் கூறாமலும், திருத்தப்பாடு கோரும் மனுவில் கூறப்பட்டுள்ள உத்தேச திருத்தப்பாட்டு விவரத்தில் கோரியுள்ள திருத்தங்கள் எவையும் எவ்விதத்திலும் ஏற்கத்தக்கதல்ல. இம்மனுவை அனுமதித்தால் மேற்படி வழக்கின் அடிப்படையும், வழக்குமூலமும் மாற்றப்பட்டுவிடும். 4ம் எதிர்மனுதாரர் குறித்தான திருத்தப்பாடு இத்தகைய சூழ்நிலையில் எவ்விதத்திலும் அனுமதிக்கத்தக்கதல்ல. 4ம் எதிர்மனுதாரர் வழக்கு தாக்கல் செய்ய சுமார் 40 நாட்களுக்கு முன்பே இறந்துவிட்டார் என்பதையும், வழக்கு நிலுவையில் இறந்ததாகவும் மனுதாரர் குறிப்பிட்டுள்ளார்.

(ii) மேலும் வா.சா.1 ஆன மனுதாரரை எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்தபோதும், 22.10.2019 தேதியிலும், 15.11.2019 ம் தேதியிலும் 4 ம் எதிர்மனுதாரர் இறப்பிற்கு முன்பே அதாவது 4 ம் எதிர்மனுதாரர் உயிருடன் இருக்கும்போதே தான் வழக்கு தாக்கல் செய்துவிட்டதாக மனுதாரர் தெரிவித்துள்ளார். மேற்படி மனுதாரர் மேற்படி தாவாவில் எந்தவொரு இடத்திலும் எப்போதும் தான் வழக்கு தாக்கல் செய்ய வழக்கறிஞரிடம் ஒப்படைத்தபிறகு வழக்கு தாக்கல் செய்யப்படும் முன்பாக 4 ம் எதிர்மனுதாரர் இறந்துவிட்டார் என்பதாக எங்கும் கூறவில்லை. மனுதாரரின் பிரமாணப் பத்திரிக்கைகள், வழக்குரை, சாட்சியங்கள் அனைத்தும் முரணாக உள்ளது. விவாதத்திற்காக வாய்தா போடப்பட்டுள்ள நிலையில் தாக்கல் செய்துள்ள திருத்தப்பாடுகள் அனுமதிக்கப்படலாகாது.

(iii) திருத்தப்பாடு விவரங்களில் கோரியுள்ள திருத்தங்கள் ஏற்கனவே முழுமையான விசாரணை முடிவுற்ற பிறகு பரிகாரத்திலும், சொத்துவிவரத்திலும் திருத்தங்கள் கோருவது வழக்கின் தன்மையை மாற்றுவதோடு ஏற்கனவே விசாரிக்கப்பட்ட விசாரணையின் அடிப்படையில் வழக்கினை முடிவு செய்வதில் குழப்பத்தை ஏற்படுத்தும். மனுதாரர் கூடுதல் எழுவினாக்கள் வனையப்பட்டதால் தாம் மேற்படி மனுவின் மூலமாக திருத்தங்கள் மேற்கொள்ள வேண்டியுள்ளதாக கூறுவது சட்டப்படி ஏற்கத்தக்கதல்ல. இம்மனுவில் சட்டப்படி ஏற்கத்தக்க காரணங்களோ, முகாந்திரமோ, அடிப்படையோ இன்றி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் வழக்கின் விசாரணையை காலதாமதப்படுத்த இம்மனுவை தாக்கல் செய்துள்ளதால் மனுவினை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென 1 முதல் 3, 7, 8 எதிர்மனுதாரர்கள் கூறியுள்ளார்கள்.

3) இருதரப்பு கற்றறிந்த வழக்குரைஞர்களின் மதிப்பிற்குரிய வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் வாய்மொழிச் சாட்சியங்களோ, சான்றாவணங்களோ முன்னிலைப்படுத்தவில்லை.

<u>4) பிரச்சினை :–</u>

இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதே ஆகும்.

<u>5) பிரச்சினைக்கான தீர்வு</u>

(i) மனுதாரர் தரப்பில் மனுதாரர்/வாதியால் விளம்புகை, விளைவுறு நிரந்தர உறுத்துக்கட்டளை மற்றும் பாகப்பிரிவினை, சுவாதீனப்பரிகாரங்கள் கோரி எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, வழக்கு புதிதாக எழுவினாக்கள் வனைந்த பிறகு விவாதத்திற்காக வாய்தா போடப்பட்டுள்ள நிலையில் தற்போது திருத்தப்பாடு மனு தாக்கல் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதால் இவ்வழக்கை மீண்டும் திறக்க செய்ய வேண்டிய நிலை மனுதாரருக்கு ஏற்பட்டுள்ளது என்றும், இது வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல என்றும், இம்மனுவை ஏற்காவிடில் பெருத்த கஷ்ட நஷ்டங்கள் ஏற்பட்டுவிடும். ஒரு முழுமையான முடிவை எட்ட முடியாத நிலை ஏற்பட்டுவிடும் என்றும், அது பல்வேறு புதிய வழக்குகளை தொடர வேண்டிய நிலையை உருவாக்கிவிடும் என்றும், இம்மனுவை ஏற்பதால் எதிர்தரப்பினருக்கு எந்த இழப்பும் ஏற்படப்போவதில்லை என்றும், எனவே விவாதத்திற்காக போடப்பட்டுள்ள வழக்கை மீண்டும் திறக்க உத்தரவிடக்கோரி இம்மனுவினை தாக்கல் செய்துள்ளது தெரிய வருகிறது.

(ii) 1 முதல் 3, 7, 8 எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கை திறக்க கோரும் மனுவிற்கு எவ்வித காரணமும் கூறாமலும், திருத்தப்பாடு கோரும் மனுவில் கூறப்பட்டுள்ள உத்தேச திருத்தப்பாட்டு விவரத்தில் கோரியுள்ள திருத்தங்கள் எவையும் எவ்விதத்திலும் ஏற்கத்தக்கதல்ல என்றும், இம்மனுவை அனுமதித்தால் மேற்படி வழக்கின் அடிப்படையும், வழக்குமூலமும் மாற்றப்பட்டுவிடும் என்றும், 4ம் எதிர்மனுதாரர் குறித்தான திருத்தப்பாடு இத்தகைய சூழ்நிலையில் எவ்விதத்திலும் அனுமதிக்கத்தக்கதல்ல என்றும், 4ம் எதிர்மனுதாரர் வழக்கு தாக்கல் செய்ய சுமார் 40 நாட்களுக்கு முன்பே இறந்துவிட்டார் என்பதையும், வழக்கு நிலுவையில் இறந்ததாகவும் மனுதாரர் குறிப்பிட்டுள்ளார் என்றும் கூறியுள்ளது தெரியவருகிறது.

(iii) மேலும் வா.சா.1 ஆன மனுதாரரை எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்தபோதும், 22.10.2019 தேதியிலும், 15.11.2019 ம் தேதியிலும் 4 ம் எதிர்மனுதாரர் இறப்பிற்கு முன்பே அதாவது 4 ம் எதிர்மனுதாரர் உயிருடன் இருக்கும்போதே தான் வழக்கு தாக்கல் செய்துவிட்டதாக மனுதாரர் தெரிவித்துள்ளார் என்றும், மேற்படி மனுதாரர் மேற்படி தாவாவில் எந்தவொரு இடத்திலும் எப்போதும் தான் வழக்கு தாக்கல் செய்ய வழக்கறிஞரிடம் ஒப்படைத்தபிறகு வழக்கு தாக்கல் செய்யப்படும் முன்பாக 4 ம் எதிர்மனுதாரர் இறந்துவிட்டார் என்பதாக எங்கும் கூறவில்லை என்றும், மனுதாரரின் பிரமாணப் பத்திரிக்கைகள், வழக்குரை, சாட்சியங்கள் அனைத்தும் முரணாக உள்ளது என்றும், விவாதத்திற்காக வாய்தா போடப்பட்டுள்ள நிலையில் தாக்கல் செய்துள்ள திருத்தப்பாடுகள் அனுமதிக்கப்படலாகாது என்றும் கூறியுள்ளது தெரியவருகிறது.

(iv) திருத்தப்பாடு விவரங்களில் கோரியுள்ள திருத்தங்கள் ஏற்கனவே முழுமையான விசாரணை முடிவுற்ற பிறகு பரிகாரத்திலும், சொத்துவிவரத்திலும் திருத்தங்கள் கோருவது வழக்கின் தன்மையை மாற்றுவதோடு ஏற்கனவே விசாரிக்கப்பட்ட விசாரணையின் அடிப்படையில் வழக்கினை முடிவு செய்வதில் குழப்பத்தை ஏற்படுத்தும் என்றும், மனுதாரர் கூடுதல் எழுவினாக்கள் வனையப்பட்டதால் தாம் மேற்படி மனுவின் மூலமாக திருத்தங்கள் மேற்கொள்ள வேண்டியுள்ளதாக கூறுவது சட்டப்படி ஏற்கத்தக்கதல்ல என்றும், இம்மனுவில் சட்டப்படி ஏற்கத்தக்க காரணங்களோ, முகாந்திரமோ, அடிப்படையோ இன்றி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், மனுதாரர் வழக்கின் விசாரணையை காலதாமதப்படுத்த இம்மனுவை தாக்கல் செய்துள்ளதாக கூறியுள்ளது தெரியவருகிறது.

(v) வழக்கு ஆவணங்களை கவனமாக பரிசீலனை செய்ததில் மனுதாரர்/வாதியால் விளம்புகை, விளைவுறு நிரந்தர உறுத்துக்கட்டளை மற்றும் பாகப்பிரிவினை, சுவாதீனப்பரிகாரங்கள் கோரி எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளால் வழக்கு விசாரணை முடிவுற்று, பின் மீண்டும் புதிதாக கூடுதல் எழுவினாக்கள் வனையப்பட்டு, தற்போது இறுதி வாதத்திற்காக நாளிடப்பட்டுள்ளது தெரியவருகிறது. இவ்வழக்கின் சங்கதிகள் மற்றும் சூழ்நிலைகளை கருத்தில் கொள்கையிலும், கற்றறிந்த இருதரப்பு

வழக்கறிஞர்களின் மதிப்புமிக்க வாதங்களை கவனத்தில் கொள்கையிலும், தற்போது முடிக்கப்பட்ட மனுதாரர் தரப்பு வழக்கை மீண்டும் திறப்பதற்கான அவசியம் எழுந்துள்ளதா? என்பதை பரிசீலிக்க வேண்டியது அவசியமாகிறது. மனுதாரரால் வழக்குரையில் திருத்தங்கள் மேற்கொள்வதற்காக வழக்கை மீண்டும் திறக்க கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது. இந்நிலையில் இம்மனுவுடன் இணைந்து மனுதாரரால் உ.வி.மு.ச. கட்டளை 6 விதி 17ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ள இ.ம.எண்.13/2024–ல் இந்நீதிமன்றம் மேற்படி மனு தற்போது இவ்வழக்கில் தரப்பினரிடையே உள்ள பிரச்சனை குறித்து தீர்வு காண்பதற்கு உதவும் வகையில் இல்லை என தீர்மானித்து மேற்படி மனுவை தள்ளுபடி செய்துள்ள நிலையில், தற்போது வழக்குரையை திருத்துவதற்காக வழக்கை மீண்டும் திறக்க கோருவதற்கான தேவை பயனற்ற ஒன்றாகிவிட்டதால், தற்போது இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

முடிவாக, இம்மனு செலவுத்தொகையின்றி தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2024ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 23ஆம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

R MANIVARMAN
Digitally signed by R MANIVARMAN
Date: 2024.10.23 17:44:48 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.

<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள் சான்றாவணங்கள்:– இல்லை</u>

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் சான்றாவணங்கள்:– இல்லை</u>

R MANIVARMAN
Digitally signed by R MANIVARMAN
Date: 2024.10.23 17:45:16 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.